
# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - மே 2, 2026

Weekly E-paper ● May 2, 2026

## காத்திருக்கிறது கடமை ஒன்று!

சுப.வீரபாண்டியன்

### இரண்டாம் பாக அரசியலின் கடமை!

காசு. நாகராசன்

### அதற்குள் ஓர் அரசியல்

தலையங்கம்

### வாக்குப்பதிவும் தேர்தல் முடிவும்

முனைவர் காந்தி பாபு

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - மே 2, 2026 Weekly E-paper ● May 2, 2026


# காத்திருக்கிறது கடமை ஒன்று!

## சுப.வீரபாண்டியன்

தேர்தல் பரப்புரைகளும், தேர்தலும் வழக்கம்போல் தமிழ்நாட்டில் அமைதியாக நடந்து முடிந்திருக்கின்றன. தேர்தலுக்குப் பிந்திய கருத்துக் கணிப்புகளும் வெளியாகி உள்ளன! பெரும்பான்மையான கருத்துக் கணிப்புகள் திமுக ஆட்சி தொடரும் என்பதாகவே இருக்கிறது!

எனினும் வழக்கத்திற்கு மாறாக, தேர்தல் முடிவுகள் வெளியாகும் நாளில், தமிழ்நாட்டில் ஒரு பதற்றம் ஏற்படக் கூடுமோ என்னும் ஐயம் பலரிடம் எழுந்துள்ளது! அதற்கு ஒரே காரணம், தமிழ்நாட்டில் புதிதாகப் பிறந்துள்ள த.வெ.க என்னும் கட்சிதான்!

எந்தக் காலத்திலும் தமிழ்நாடு கண்டிராத சில புதிய வழிமுறைகளை இந்தக் கட்சி கையில் எடுத்துள்ளது! அதாவது, குழந்தைகளைத் தூண்டிவிட்டு, குழந்தைகளின் மூலமாகப் பெற்றோர்களின் வாக்குகளைப் பெற முடியுமா என்று அந்தக் கட்சியும், அதன் தலைவரும் முயற்சி செய்கிறார்கள்! இது ஆரோக்கியமான அரசியலாக இருக்க முடியாது!

வேறு சொற்களில் கூற வேண்டுமானால், "அரசியலற்ற அரசியலை" முன்னெடுக்க அந்தக் கட்சி முயற்சி செய்கிறது! இந்தக் கொள்கைக்காக, இந்தக் கோட்பாட்டிற்காக எங்களோடு இணைந்து செயல்பட வாருங்கள் என்று அழைப்பு விடுக்காமல், சாக்லேட் வேண்டுமானால் எப்படி அழுது அடம் பிடிப்பீர்களோ, அப்படி அழுது அடம் பிடித்து விசில் சின்னத்திற்கு வாக்களிக்கச் சொல்லுங்கள் என்கிறார் அந்தக் கட்சியின் தலைவர், நடிகர் விஜய்! இது என்ன அரசியல் என்று புரியவில்லை!



இதன் பக்க விளைவு என்னவாக ஆகியிருக்கிறது என்பதையும் நாம் பார்க்க வேண்டும். தேர்தல் முடிவுகள் வரும் நாளில், விஜய் மற்றும் அவரது கட்சியினர் வெற்றி பெறவில்லை என்றால், நாங்கள் தற்கொலை செய்து கொண்டு இறந்து போய் விடுவோம் என்றும், வாக்களிக்காத எங்கள் குடும்பத்தினர் மீது தாக்குதல் நடத்துவோம் என்றும் இளம்பிள்ளைகள் சிலர் பேசத் தொடங்கி இருக்கிறார்கள்!

இப்படிப் பிள்ளைகளைத் தூண்டிவிட்டு விட்டு, அவர் கோயில் கோயிலாகப் போய்க்கொண்டிருக்கிறார் . தேர்தலுக்கு முன்பே, திருச்சியில் ஒரு மாதா கோயிலில் மண்டியிட்டு நடந்தார். தேர்தலுக்குப் பிறகு, கையில் வேலோடு திருச்செந்தூர் கோயிலுக்குப் போனார். பிறகு மராத்தியத்தில் உள்ள சீரடி சாய்பாபாவைக் கண்டு திரும்பினார். இப்போது, வேளாங்கண்ணி மாதா கோயிலுக்கும், நாகூர் பள்ளிவாசலுக்கும் போகப் போவதாக அறிவித்திருக்கிறார்!

இவருடைய அரசியல், தமிழ்நாட்டுக்கு ஒரு பெரும் ஆபத்தைக் கொண்டு வந்து விடுவதாக இருக்கிறது!

தேர்தலில் இவருக்குப் பெரிய வெற்றி எதுவும் வந்து விடப் போவதில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. இருப்பினும், தேர்தல் முடிந்த கையோடு, இளைஞர்களிடம் நிறையப் பேசி, நிறைய எடுத்துச் சொல்லி எதிர்காலத்தில் இவை போன்ற நிகழ்வுகளை மாற்ற வேண்டிய கட்டாயமும் கடமையும் நம் எல்லோருக்கும் இருக்கிறது! ●

# இரண்டாம் பாக அரசியலின் கடமை!

**காசு. நாகராசன்**

ஜனநாயகத் திருவிழா எனப்படுகிற தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் (2026) நடந்து முடிந்திருக்கிறது.

திராவிடமாடல் ஆட்சியின் இரண்டாம் கட்டம் தொடங்குவதற்கான ஒப்புதலை ஏறக்குறைய 50 விழுக்காட்டிற்கும் மேலான வாக்காளர்கள் வழங்கியிருப்பது, மே நான்காம் தேதி காலையில் உறுதியாகிவிடும்.

2021 ஆம் ஆண்டு திமுகழக ஆட்சி அமைந்தபோது, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அந்த ஆட்சிக்கு திராவிடமாடல் என்று பெயர் சூட்டுவார் என்பதோ, சுயமரியாதை - சமத்துவம் - சமூகநீதி ஆகிய கோட்பாடுகளைத் தனது ஆட்சியின் அடையாளமென அவர் குறிப்பிட்டுச் சொல்வார் என்பதோ, ஒன்றியம் என்கிற சொல்லாடலை வைத்து பாஜகவின் ஏக இந்திய அரசியலுக்கு அதிர்ச்சி வைத்தியம் தருவார் என்பதோ யாருமே நினைத்துக்கூடப் பார்க்காதது.

அந்தவகையில், அமையவிருக்கிற திராவிடமாடல் 2.0 முன்னைவிட வேகமாகவே இருக்கும் என்பதில் அய்யமில்லை. எனவே, அடுத்த அய்ந்தாண்டுகள் திமுகழகத்தின் செயல்பாடுகளுக்குச் சமூகதளத்தில் வலிமை சேர்ப்பதற்கும், திமுக எதிர்ப்பு என்ற பெயரில் இனப்பகைவர்களால் வடிவமைக்கப்படுகிற சூழ்ச்சியான வேலைத் திட்டங்களையும், தமிழ்நாட்டு இளைஞர்கள் - மாணவர்களிடமும் அம்பலப்படுத்தி அவர்களை அணிதிரட்டும் பணியை நாம் செய்தாக வேண்டும்.



இன்றைக்கு உயர்கல்வி படித்தவர்களாக, உயர்பதவி வகிப்பவர்களாக இருக்கிறோமே! நம்முடைய முந்தைய தலைமுறை கல்வி மறுக்கப்பட்ட கைநாட்டுகளாக, உழைப்புச் சுரண்டப்பட்டவர்களாக, தோளில் போடுகிற துண்டைக்கூட கக்கத்திலும், இடுப்பிலும் கட்டிக்கொண்டு கூனிக்குறுகி அடிமைகளாய் நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர் என்கிற கொடுமையை, அதிலிருந்து மீண்டு நாம் இன்றைய நிலையை அடைவதற்கு ஒரு கொள்கையும், கொள்கை காத்த இயக்கமும், தலைவர்களும் தொண்டாற்றி இருக்கிறார்கள் என்கிற வரலாற்றையும் நாம்தான் கற்றுத்தர வேண்டும்.

நமது இன்றைய வாழ்க்கையைப் பறித்து, நமது சந்ததிகளை மீண்டும் அடிமைகளாக்கி மேலாதிக்கம் செய்திடவே பிரிவினைகள் தூண்டப்படுகின்றன. புதிது புதிதாக அரிதாரம் பூசப்பட்ட தலைவர்கள் அடையாளம் காட்டப் படுகிறார்கள். இதன்மூலம் நமது கைகளை எடுத்தே நமது கண்களைக் குருடாக்கத் துடிக்கிறது ஒரு கூட்டம் என்பதை எடுத்துச் சொல்லி நமது பிள்ளைகளை எச்சரிக்கை செய்தாக வேண்டும்.

சுருக்கமாக சுயமரியாதை, சமத்துவம், சமூகநீதி குறித்தும், அதில் பெரியாருக்கும் திராவிட இயக்கத்திற்கும் உள்ள பங்கு குறித்தும் கற்றுத்தர வேண்டும். இதை இன்றைய சமூகச் சூழலுக்கும், நம் பிள்ளைகள் வளர்ந்திருக்கிற அறிவியல் தொழில் நுட்பக் காலத்திற்கும் ஏற்ற வகையில் வடிவமைத்துச் செயல்படுத்துவது குறித்து நாம் சிந்தித்தாக வேண்டும்.

இதுதான் இப்போதைய நம்முடைய இரண்டாம் பாக அரசியலின் பெருங்கடமை ஆகும்!

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## அதற்குள் ஓர் அரசியல்

தேர்தலுக்குப் பின் கருத்து கணிப்புகள் (Exit Poll) என்ன சொல்கின்றனஎன்பதை29-4-2026மாலைதொலைக்காட்சி ஊடகங்கள் ஒளிபரப்பின. கருத்துக் கணிப்புகள் என்ன சொல்கின்றன என்பதைவிட, அந்த கருத்துக் கணிப்புக்குள் ஓர் அரசியல் ஒளிந்திருக்கிறது என்பது அப்போது புரிந்தது.

திமுகழகம் ஆட்சியை அமைக்கும், அதிமுக இரண்டாம் இடத்தில் இருக்கிறது என்பதைத் தெளிவாய்க் கருத்து கணிப்புகள் சொல்கின்றன.

குறிப்பாக 'அக்னி நியூஸ் சர்வீஸ்' கணிப்பின்படி திமுகழகம்-169, அதிமுக-64, தவெக- 01. இதில் தவெக 01 என்ற இடத்தில் இருந்த காரணத்தாலும், திமுகழகம் 169 என்ற இலக்கத்தில் முதலிடத்தைப் பெற்ற காரணத்தாலும் இந்த கணிப்பு ஏறத்தாழ அனைத்து ஊடகங்களாலும் புறம் ஒதுக்கப்பட்டு விட்டன. இரண்டாம் இடத்தில் எதிர்க்கட்சியாக வந்திருக்கும் அதிமுகவை ஊடகங்கள் கண்டுகொள்ளவே இல்லை. இதற்குள் இருக்கும் அரசியல் என்ன?

அதிமுக பாஜகவின் பிடியில் சிக்கிக்கொண்டு இருக்கிறது. அதனால் எதிர்கட்சியாக இனிஉருப்படியாகச் செயல்பட முடியாது என்பதல்ல, செயல்பட விடாமல் சிதைத்துவிடும், பாஜக. அதன்பிறகு அந்த இடத்தில் வைக்க ஓர் அடிமை தேவைப் படுகிறது பாஜகவுக்கு. அதுதான் தவெக. அது சவலைப் பிள்ளைதான் என்றாலும் ஆர்எஸ்எஸ்/பாஜகவின் அசைவின்படி தவெகவைத் தூக்கிப் பிடிக்க வேண்டும், பேசுபொருளாக்க வேண்டும், மக்கள் நினைவில் நிறுத்த வேண்டும் என்ற அடிப்படையில், முடமாகிப்போன அந்தக் கட்சிக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசின ஊடகங்கள்.

'அக்சஸ் இந்தியா' நிறுவனம் திமுக, 92-110 என்றும், தவெக, 98-120 இடங்களில் வெற்றிபெறும் என்றும் கருத்து கூறியதை வைத்து விஜய் முதல்வராக ஆகிவிட்டதைப் போல ஒரு ஊடகம் ஊசிப் பட்டாசு கொளுத்தியதும் உண்டு.

அதாவது அதிமுகவைக் காலி செய்துவிட்டு, தவெகவை நெரிக்கப் பார்க்கிறது பாஜக, திமுகவிற்கு எதிராக.

தொடமுடியாத சூரியன், திமுக. தொட்டால் கருகும் தாமரை இலையோடு மட்டுமல்ல, விசிலோடும்தான்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## புரட்சிக் கவிஞர் பிறந்தநாள்



புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் 139ஆம் பிறந்த நாளையொட்டி 29-04-2026 அன்று திராவிட இயக்கத் தமிழர் பேரவை அலுவலகத்தில் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் தலைமையில் கவிஞரின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் தோழர்கள் எட்வின், கார்த்தி, மனோகரன், திராவிடச் செல்வன், இளங்கோ உள்ளிட்டோர்.

# வாக்குப்பதிவும் தேர்தல் முடிவும்

முனைவர் காந்தி பாபு

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் சற்றேறக்குறைய 85% வாக்குப்பதிவு என்பது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனை. ஆளுங்கட்சிக்கு எதிரான அலை வீசாதபோது எப்படி இவ்வளவு வாக்குப் பதிவு ?

SIR-ன் மிக முக்கியத் தாக்கம், நீண்ட காலமாகப் பட்டியலில் இருந்த 'போலியான' அல்லது 'இறந்த' வாக்காளர்களை நீக்கியதாகும். தமிழ்நாட்டில் மட்டும் சுமார் 74 லட்சம் தகுதியற்ற பெயர்கள் (இறந்தவர்கள், இடம் மாறியவர்கள் மற்றும் இரட்டைப் பதிவுகள்) கண்டறியப்பட்டு நீக்கப்பட்டன. இதனால் 2021 இல் 6.41 கோடியாக இருந்த வாக்காளர்கள் எண்ணிக்கை 2026 இல் 5.67 கோடியாகக் குறைந்துள்ளது. எண்ணிக்கை குறைந்தாலும், வாக்குப்பதிவு சதவீதம் (Turnout Percentage) இயல்பாகவே கணிசமாக உயர்ந்தது.

ஏதோ விஜயின் வருகையால் மாற்றத்திற்காக வாக்குப்பதிவு அதிகரித்தது போல் பரப்பப்படும் செய்திகளில் உண்மை இல்லை.

2021 தேர்தலை விட சுமார் 20,00,000 வாக்குகள் கூடுதலாக பதிவாகி இருக்கிறது! இதில் 14 லட்சம் முதல் முறை வாக்காளர்கள், சராசரியாக தொகுதிக்கு சுமார்8,000 வாக்குகள் கூடுதலாகப் பதிவாகியிருக்கிறது அவ்வளவே.

ஆனால், இவையெல்லாவற்றையும் விட, தற்போதைய அரசின் செயல்பாடுகள், வேலைவாய்ப்பு, கல்வி மேம்பாடு, விளிம்பு நிலை மக்கள் முன்னேற்றம், தொழில் வளர்ச்சி, வீட்டுக்கு ஒரு பயனாளி, உள்கட்டமைப்பு மற்றும் எதிர்காலப் பொருளாதாரம் குறித்த திட்டங்கள் வாக்காளர்களிடையே ஒரு தெளிவான நிலைப்பாட்டை எடுக்கத் தூண்டியதும் அதிகப்படியான வாக்குப்பதிவிற்கு ஒரு பெரிய காரணியாக அமைந்துள்ளது.

தமிழக தேர்தல் களம் பலமுனைப் போட்டியில் இருந்தாலும் , திமுகவின் கட்டமைப்பு, பலமான கூட்டணி மற்றும் திராவிட மாடல் அரசின் மக்கள் நலத்திட்டங்கள், திமுக தலைவர் ஸ்டாலினுக்கு மக்களிடம் ஏற்பட்டுள்ள நம்பிக்கை, திமுகவினரின் களப்பணி ஆகியன திமுக கூட்டணி 50 சதவீதத்தை எட்டுவதற்கு ஒரு வலுவான அடித்தளமாக உள்ளன.

வழக்கமாக திமுகவிற்கு எதிராக விழும் 'Anti-incumbency' வாக்குகள் சிதறாமல் ஒரு எதிர்க்கட்சிக்கு மட்டுமே



செல்லும், அது ஆளுங்கட்சிக்கு ஆபத்தாக முடியும். ஆனால் தற்போது அந்த வாக்குகள் அதிமுக, தவெக மற்றும் நாம் தமிழர் என பலமுனைப் போட்டியில் பிரிவது திமுகவிற்குச் சாதகமாகிறது.

விஜயின் வருகையால் திமுக எதிர்ப்பு மற்றும் அதிமுக ஆதரவு வாக்குகளில் ஒரு பெரிய தாக்கம் ஏற்பட்டுள்ளது. அதிமுகவின் கோட்டைகளாகக் கருதப்படும் பல இடங்களில், குறிப்பாக இளைஞர்கள் , நடுத்தரப் பிரிவினர் மற்றும் நடுநிலை வாக்காளர்கள் மத்தியில் விஜய் ஒரு மாற்றாகப் பார்க்கப்படுகிறார். இது அதிமுகவின் பாரம்பரிய வாக்கு வங்கியில் ஒரு பகுதியை சிதைத்துள்ளது கண்கூடாகத் தெரிகிறது. மேலும், திமுக எதிர்ப்பு வாக்காளர்கள் , எடப்பாடியை விட ஒரு வலுவான எதிர்க்கட்சியைத் தேடும் நிலையில், விஜய் களத்தில் இருப்பதால், அந்த வாக்குகள் முழுமையாக அதிமுகவிற்குச் செல்லாமல் தவெக-விற்குப் பிரிகிறது. இது திமுகவின் வெற்றி வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்கிறது.

இது மட்டுமல்லாமல், ஒன்றிய பாஜகவின் மிரட்டல்களுக்கு அடியபணியாமல், மாநில உரிமைகளை அடகு வைக்காமல் , மக்கள்நலத் திட்டங்களை மிகச் சிறப்பாக செயல்படுத்தி வரும் தமிழக முதலவர் ஸ்டாலினின் ஆளுமைத்திறனும் பெருவாரியான அரசியல் புரிந்த வாக்காளர்களைத் திமுகவிற்கு ஆதரவாக வாக்களிக்க வைத்துள்ளது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது 50 சதவீத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று மீண்டும் திமுக அபார வெற்றி பெறும் என்பது தெளிவாகப் புரிகிறது.

●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian